**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப.,**

அ 4/05/2018 நாள்: 11.01.2018.

பொருள் : உள்ளூர் விடுமுறை - நாகர்கோவிலில் பிரசித்தி பெற்ற "அருள்மிகு நாகராஜா திருக்கோவில் தேரோட்ட திருவிழா" 23.01.2018 முதல் 01.02.2018 வரை நடைபெறுதல் - 31.01.2018 (புதன்) அன்று உள்ளூர் விடுமுறை வழங்கி - ஆணையிடப்படுகிறது.

படிக்கப் பட்டவை :
1. அரசு நிலை ஆணை எண் 600 பொது (பல்வகைத்) துறை நாள் : 06.07.2012.
2. இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலர், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் தலைமை அலுவலகம், சுசீந்திரம் கடித எண் ந.க.56/2011/டி1 நாள்: 03.01.2018.

+++O+++

**ஆணை:**

பார்வையில் 1-ல் காணும் அரசாணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் பிரசித்தி பெற்ற "அருள்மிகு நாகராஜா திருக்கோவில் தேரோட்ட திருவிழாவினை" முன்னிட்டு 31.01.2018 (புதன்) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(2)** 31.01.2018 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2018 பிப்ரவரி திங்கள் இரண்டாவது சனிக்கிழமை (10.02.2018) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)** 31.01.2018 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

(ஒம்)/- டாக்டர்.தா.பரிதாபானு,
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது).
கன்னியாகுமரி மாவட்டம்.

/உண்மை நகல் உத்தரவுப்படி/

12-1-18
உசூர் மேலாளர் (பொது)

12.1.18

பெறுநர்

அனைத்து மாவட்ட அலுவலர்கள்

நகல் : தலைமைச் செயலாளர், பொது (பல்வகைத்) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நகல் : முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
நகல் : கூடுதல் செயலர், பொதுத்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நகல் :

1) மாநிலக் கணக்காயர், சென்னை-18.
2) மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக எழுத்தர்
3) மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர்
4) மாவட்ட ஆட்சியரின் அரசிதழ் பதிவு பெற்ற நேர்முக உதவியாளர்கள்
5) மாவட்ட சார்நிலை அலுவலர்கள்
6) மாவட்ட கருவூல அலுவலர்
7) மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், நாகர்கோவில்
8) அனைத்து நகராட்சி மற்றும் ஊராட்சி ஆணையர்கள்
9) இயக்குநர், நாகர்கோவில் வானொலி
10) நகராட்சி ஆணையர், குழித்துறை.
11) செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாகர்கோவில் (20 நகல்கள்) - பிரசுரம் செய்திடவும்
12) அ2 / அ4 பிரிவு